2003 ஏப்ரல் 25]

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஐந்து நாட்கள் கழித்தும்கூட, எடுத்துக்கொள்ளவில்லையென்று சொன்னால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கே பொருள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; என் ஆய்வில் இருக்கிறது. எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான். இது உங்கள் தொகுதி சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் நீங்கள் எழுப்புகிறீர்கள். எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: தொகுதி மட்டும் அல்ல. கோவை நகரத்திலே பீதி நிலவுகிறது. அந்த அளவிற்கு அங்கே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாட்டில் எத்தனையோ முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று பிறகு சொல்கிறேன்.

(ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் இன்று பயின்று கொண்டிருக்கக்கூடிய மாணவர்களும், அதேபோலப் பயிற்சி டாக்டர்களும் போராட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; பத்திரிகைகளிலேயெல்லாம் பார்த்தோம். அமைச்சர் அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; இப்போது எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் ஏதோ பேசிக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுசம்பந்தமாக

ஏதாவது சொல்ல முடிந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; ஒன்றும் எடுக்கவில்லை இப்போது. அமைச்சர் ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: இரண்டு விஷயங்கள். அதையும் சேர்த்துச் சொல்லிவிட்டால், அமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; சேர்த்தெல்லாம் சொல்வதற்கு இல்லை. இப்போது பிரச்சினையை எடுக்கவில்லை.

முற்பகல் 11-05

திரு. ஐ. கணேசன்: அதனை நாங்கள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கணேசன், அறையிலே வந்து பேசி அதைப்பற்றி முடிவு பண்ணித்தான் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்கள், மருத்துவப் பட்டப் படிப்பு பயிற்சி மாணவர்கள் சில கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பொழுது போராட்டம் என்ற அளவிற்குத் தொடர்ந்து மருத்துவமனைகளையும், வகுப்புகளையும் புறக்கணித்து வருகிறார்கள். அவர்களேகூட, பலமுறை என்னை நேரிலே வந்து சந்தித்தார்கள். அவர்களுடைய சந்தேகங்களுக்கெல்லாம் நான் விளக்கம் அளித்திருக்கிறேன். ஆனால், திடீரென்று எந்தவித முன்னறிவிப்புமின்றி, அவர்கள் அரசுக்குக்கூட தகவல் கொடுக்காமல், திடீரென்று வகுப்புகளையும், மருத்துவமனைகளில் பயிற்சி எடுத்துக்கொள்ளாமலும் புறக்கணித்து வருகிறார்கள். இருந்தாலும், அதிகாரிகள் மட்டத்தில், அதாவது மருத்துவக் கல்லூரி இயக்குநர் அவர்கள், அவர்களோடு பேசி, போராட்ட் அறிவிப்பை கைவிட்டுவிட்டு, நீங்கள் அரசோடு பேசுவதற்கு வாருங்கள் என்று நேற்றையதினம் அவர்கள் அழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இனி மாணவ மாணவிகள்தான்—அந்தப் பயிற்சி மருத்துவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள்தான் அரசோடு பேசுவதற்குத் தயாராக இருந்தால் அவர்கள்தான்—முடிவு எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட போராட்ட அறிவிப்பை அவர்கள் கைவிட்டு, அரசோடு அல்லது துறை அதிகாரிகளோடு பேச வந்தால்

2003 ஏப்ரல் 25] [திரு. செ. செம்மலை]

நாங்கள் அவர்களுடைய கோரிக்கைகளை நிச்சயமாகப் பரிசீலித்து, அதற்கு நல்ல முடிவு எடுக்கிறோம். இருந்தாலும், அவர்களைப் பாதிக்கின்ற வகையிலே எந்த முடிவையும் இந்த அரசு எடுத்துவிடவில்லை. எனவே, நான் இந்த மன்றத்தின் வாயிலாக பயிற்சி மாணவர்களையும், பட்டமேற்படிப்பு மாணவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இந்தப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அவர்கள் பயிற்சியிலே அக்கறை கொள்ளவேண்டுமென்று நான் அவர்களை இந்த மன்றத்தின் வாயிலாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுடைய மகன்—ஒரே மகன் என்று நினைக்கிறேன்—அவர்கூட, சென்னை மருத்துவக் கல்லூரியிலே பயிற்சி மருத்துவராகத்தான் இருக்கிறார். எனவே, அவரும் பெற்றோர்கள் சார்பிலே மாணவர்களுக்கு ஓர் அறிவுரையாகச் சொல்லி, மாணவர்கள் இந்தப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, பயிற்சியிலே அக்கறைக் கொள்ளவேண்டும். காரணம், அவர்கள் எல்லாம் சிறந்த மருத்துவர்களாக வரவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அவர்களுக்காக இலட்சக்கணக்கிலே, கோடிக்கணக்கிலே அரசு செலவு செய்துகொண்டு இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் நீங்கள் வேண்டுகோள் வைக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுகுறித்து மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பிரச்சினையே எடுத்துக்கொள்ளவில்லை. ஞானசேகரன் இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய காரணத்தினால் உங்களை பதில் சொல்லச் சொன்னேன். ஞானசேகரன் பெயர் பத்திரிகையிலே வரும்போது, ஜி.கே. மணி பெயரையும் சேர்த்துப் போடுங்கள். கணேசன் பெயரையும் சேர்த்துப் போடுங்கள். உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: தலைவர் அவர்களே,...

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே,...

திரு. வை. சிவபுண்ணியம்: தலைவர் அவர்களே,...

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹேமச்சந்திரன், சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. செ. செம்மலை: இதே போன்று கோரிக்கைகளை வலியுறுத்தி மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம், ஐ. கணேசன் இன்னும் நன்மாறன் போன்றவர்களும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து அவர்களும் மாணவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளாதபோது இப்படிக் குறுக்கு வழியிலே புகுவது நல்லதல்ல.

(இ) ஸ்ரீ வைகுண்டம்-விவசாயச் சங்கத் தலைவர் கொலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தூத்துக்குடி மாவட்டத்தில், ஸ்ரீ வைகுண்டம் என்ற இடத்திலே 22ஆம் தேதி இரவு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தாலுகா விவசாய சங்கத்தினுடைய தலைவர் மகாலிங்கம் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுசம்பந்தமாக நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இன்றைக்குத்தான் நீங்கள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, மணி.

திரு. ஜி.கே. மணி: கல்வி அமைச்சர் சொன்னார்களே, அதிலே ஒன்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை; அந்தப் பிரச்சினையை இப்போது எடுக்கவில்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்